*செய்தி வெளியீடு* **நாள்: 26.12.2024**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் அனைத்து பணிகளையும் விரைவுப்படுத்தி, மக்களின் பயன்பாட்டிற்கு எவ்வளவு விரைவாக கொண்டு வர முடியுமோ, அவ்வளவு விரைவாக கொண்டு வரப்படும்.**

**சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை ஆய்வு செய்தபின் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று *(26.12.2024)* சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி காலனியில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து **மாண்புமிகு அமைச்சர் அவர்கள்** கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் இயங்கிவரும் பெரியார் நகர் பொது நூலகத்தை சி.எம்.டி.ஏ சார்பில் **முதல்வர் படைப்பகம்** அமைப்பது தொடர்பாகவும், பெரியார் நகர் பேருந்து நிலையத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளையும், அகரம், ஜெகநாதன் தெருவில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு மையத்தின் வளர்ச்சி பணிகளையும், மற்றும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** தொடங்கி வைக்கப்பட்ட **"முதல்வர் படைப்பகத்தையும்",** அதைத்தொடர்ந்து புதியதாக கட்டப்பட்டுவரும் திரு.வி.க. நகர் பேருந்து நிலையத்தின் பணிகளின் முன்னேற்றத்தை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்திற்கு வேண்டிய உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கும், தனியாக ஒரு அங்காடி வேண்டுமென்று வண்ண மீன்கள் விற்பனையாளர் சங்கத்தினர் கோரிக்கை வைத்தனர். **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** பொறுப்பேற்ற பிறகு சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் இந்த இடத்தில் 180 க்கும் மேற்பட்டோர் வியாபாரம் செய்வதற்குண்டான கடைகளும், அதேபோல் அந்த தொழிலுக்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்குண்டான கடைகளும், அதேபோல் உணவகங்கள் மற்றும் வண்ணமீன்கள் அக்வாரியம் போன்ற சிறப்பு வசதிகளுடன் கூடிய ஒரு முனையத்தை இங்கு ஏற்பாடு செய்ய உள்ளோம்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** இந்த வண்ண மீன்கள் உற்பத்தியாளர்களுக்கு தேவையான கட்டுமானத்தை நிறுவுவதற்கு **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** நேரடியாக இதே பகுதிக்கு வருகை தந்து இந்த பணிகளை துவக்கி வைத்தார்கள். இப்பணிகளுடைய முன்னேற்றத்தை இன்றைக்கு இந்த தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன் அவர்களும், எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்களும், முதன்மை செயல் அலுவலர் திரு.சிவஞானம் இ.ஆ.ப., அவர்களும், இந்த தொகுதியினுடைய கண்காணிப்பு அலுவலர் திரு.கணேசன் இ.ஆ.ப., அவர்களும், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்களும் இன்றைக்கு இந்த பகுதியில் கள ஆய்வு செய்து இருக்கின்றோம். இந்த திட்டமானது 2025 செப்டம்பர் மாதத்திற்குள் கொளத்தூர் வண்ண மீன்கள் விற்பனை மையம் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான முயற்சிகளை ஆய்வுகள் மூலமாக பணியின் உடைய முன்னேற்றத்தை தொடர்ந்து ஆய்வு செய்து இருக்கின்றோம். இதைத் தொடர்ந்து வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் இடம்பெற்று இருக்கின்ற பெரியார் நகர் பேருந்து முனையத்தையும், திருவிக நகர் பேருந்து முனையத்தையும், அதேபோல் கொளத்தூர் ஜெகநாதன் தெருவில் அமைய இருக்கின்ற டயாலிசிஸ் மருத்துவமனை பணிகளையும் அதைத் தொடர்ந்து புதியதாக பெரியார் நகர் நூலகத்தில் உருவாக இருக்கின்ற முதல்வர் படைப்பகத்தின் பணி முன்னேற்றங்கள் குறித்தும் தொடர்ந்து ஆய்வினை மேற்கொள்ளவிருக்கின்றோம்,

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** கடந்த 14.3.2024 அன்று அடிக்கல் நாட்டிய பணிகளும் அதைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 4.12.2024 அன்று வால்டாக்ஸ் சாலையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** நேரடியாக துவக்கப்பட்ட பணிகளையும் சுமார் வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்குண்டான 252 பணிகளையும் ரூபாய் 6000 கோடி அளவிற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை தொடர்ந்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும், சென்னை பெருநகர மாநகராட்சியும் ஏனைய துறைகளும் ஒருங்கிணைந்து இந்த பணிகளின் முன்னேற்றத்தை வரும் டிசம்பர் 2025குள் எவ்வளவு பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்க முடியுமோ அத்தனை பணிகளையும் மேற்கொண்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் என்று **மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்**

உத்தரவிட்டதன் பேரில் இந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் என்கிற முறையில் நானும் சட்டப்பேரவை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய திரு.வெற்றி அழகன் அவர்களும் இந்த ஆய்வில் பங்கேற்று இருக்கின்றார்கள். தொடர்ந்து வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் பணிகளை முடக்கி விட்டு மக்களின் பயன்பாட்டிற்கு எவ்வளவு விரைவாக கொண்டு வர முடியுமோ அவ்வளவு விரைவாக கொண்டு வருவதுக்குண்டான அனைத்து சாத்திய கூறுகளையும் ஆராய்ந்து பணிகளை விரைவுபடுத்தி வருகின்றோம்.

இந்த ஆய்வுகளின்போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன் அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் திரு.ப.கணேசன், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவின் குமார், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.கூ.பீ.ஜெயின், திருமதி.சரிதா மகேஷ்குமார், மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு.ஆறுமுகம், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், இணை இயக்குநர் பொது நூலகம் திரு.இளங்கோ சந்திரகுமார், மாநகராட்சி மண்டல அலுவலர்கள் திரு.சுரேஷ், திரு.முருகன், மாவட்ட நூலக அலுவலர் திருமதி.கவிதா, உள்ளாட்சி பிரதிநிதி திரு.ஐ.சி.எப்.முரளிதரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.சுதா தீனதயாளன், திரு.நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.யோகபிரியா, திருமதி.சாரதா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்உடனிருந்தனர்.

Verified RealEstate™